பயிற்சியைப் பெறக் கூடிய துறையிலிருந்து ஒருவர் தேர்ந்து எடுக்கப்படவேண்டும் என்று உயர்நீதிமன்றம் பரிந்துரை செய்திருக்கிறது. அதை அரசு தீர ஆராய்ந்து, அந்த அடிப்படையில் நடவடிக்கை எடுக்க இருக்கிறது.

எ. வேடசந்தூர் இறைவை கூட்டுறவுச் சங்கம் மூலம் தோண்டப்பட்ட கிணறுகள் செயல்படாமை.

வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "வேடசந்தூர் தொகுதி தொப்பநாயக்கனூர் இறைவை நீர்ப்பாசன கூட்டுறவுச் சங்கம் மூலம் தோண்டப்பட்ட, கிணறுகள் செயல்படாது இருப்பது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை நான் வைக்கிறேன்.

அறிக்கை

மதுரை மாவட்டம், வேடசந்தூர் தாலூக்காவில் உள்ள தொப்பநாயக்கனூர் கூட்டுறவு நீர்ப்பாசன சங்கம் 30-12-1970-ல் பதிவு செய்யப்பட்டு 19-2-1971 முதல் வேலை துவங்கியது. நாளது தேதியில் இச் சங்கத்தில் 126 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்கள் ரூ. 3,400 பங்குத் தொகையாக செலுத்தியுள்ளனர். மேற்கண்ட 126 உறுப்பினர்களில் 63 உறுப்பினர்கள் தங்களின் 116 ஏக்கர் நிலத்தை சங்கம் மூலம் நீர்ப்பாசனவசதி பெற ஒன்று சேர்த்துள்ளனர். சங்கத்தின் மூலம் 107 ஏக்கர் நிலத்திற்கு பாசன வசதி செய்து தரும் வகையில் 9 திறவை கிணறுகளும், 5 குழாய் கிணறுகளும் தோண்ட ரூ. 5, 67, 800 மதிப்பீட்டில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டது. மேற்படி திட்டத்திற்கு தமிழ்நாடு மாநில நிலவள வங்கி ரூ. 4,95, 400 கடன் அனுமதித்து வேடசந்தூர் நிலவள வங்கி மூலம் ரூ. 3,72,820 வழங்கியுள்ளது. சிறு விவசாயிகள் மேம்பாட்டு கழகத்தினரிடமிருந்து சங்கத்தில் முடிக்கப்பட்ட வேலைகளின் மதிப்பீட்டில் 50 சதவீதம் முறையில் ரூ. 1, 85, 241 இச் சங்கம் மானியமாகப் பெற்று நிலவள வங்கியில் பெற்றகடன் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டுள்ளது. மேற்படி கடன் உதவியுடன் சங்கம் 9 திறவை கிணறுகளையும் 5 குழாய் கிணறுகளைளம் தோண்ட பணிமேற்கொண்டது. 9 திறவை கிணறுகளில் 6 கிணறுகளில் வேலை முழுவதும் முடிவடைந்து, மூன்று கிணறுகளில் பணி நிலுவையாக உள்ளது. முழுவதும் வேலை முடிந்த 6 திறவை கிணறுகளில் 4 கிணறுகளுக்கு மின்சார பம்புசெட்டுகள் அமைக்கப்பட்டு 20 ஏக்கர் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்யப்பட்டுள்ளது. எஞ்சிய 2 திறவை கிணறுகளிலும் மின்சார பம்புசெட்டுகள் அமைக்கவும் நிலுவையிலுள்ள மூன்று கிணறுகளின் பணிகளை முடிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஐந்து குழாய்க் கிணறுகள் தோண்டியதில் நான்கு குழாய் கிணறு

களின் பணி திட்ட அறிக்கையின்படி முடிக்கப்பெறாமலும் ஒரு குழாய் கிணறு பொய்த்துவிட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. நிலுவையில் உள்ள வேலைகளை முடிக்கத் தேவையான கூடுதல் நிதி உதவி பெறும் பொருட்டு திருந்திய மதிப்பீடு தயாரித்து ஒப்புதல் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே வேடசந்தூர் தொகுதி தொப்பநாயக்கனூர் இறவை கூட்டுறவுச் சங்கம் மூலம் தோண்டப்பட்ட கிணறுகள் முழுவதும் செயல்படாது இருக்கின்றன என்று கூறுவது சரியல்ல.

வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையி லேயே, தோண்டப்பட்ட 6 இறவை கிணறுகளில் 2 கிணறுகளுக்கு இன்னும் மின்சார இணைப்பு கொடுக்காத காரணத்தால் செயல் படாமல் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதுவும் இந்தப் பணி 1973 ஆம் ஆண்டிலே முடிக்கப்பட்ட பணி, அது மின்சார கருவி பொருத்தப்படாத காரணத்தால் இயங்காமல் இருக்கிறது. அதைப்போலவே, விவர அறிக்கையிலேயே, தமிழ் நாடு மாநில நிலவள வங்கி ரூ. 4,95,400 கடன் தர அனு மதித்திருந்தாலும், வேடசந்தூர் நிலவள வங்கி மூலம் 3,72,820 மட்டுமே வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த 1 லட்சம் ரூபாய் கடனாக வழங்கப்படாததினால்தான், 7 ஆண்டு காலமாக அந்த கிணறுகள் செயல்படாமல் இருக்கின்றன என்பதை கருத்தில் கொண்டு, குறிப்பிட்ட கால அளவுக்குள் தொடங்கவும், புதிதாக போடாமல் இருக்கிற கிணறுகளுக்கு அந்த சங்கத்திலிருந்து கடன்கள் வழங்கவும், இந்த 1 கோடியே 22 ஆயிரம் ரூபாய்க்கு வட்டி சலுகை அளிப்பதற்கு அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மின் இணைப்புக் கொடுப்பது போன்ற சில பிரச்சினைகளில் சில ஆண்டுகளாகவே அங்கே தாமதம் ஏற்பட்டிருப்பது உண்மைதான். விவசாயி களுக்கும் அந்தப் பிரச்சனை இருக்கிறது என்பதும் உண்மைதான். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டது போல் விவசாயிகளின் நலன் கருதி அதையெல்லாம் உடனடியாக நடை முறைப்படுத்த அரசாங்கம் உத்தரவிட்டு விரைவில் இதை நடை முறைப்படுத்தும்.

அரசினர் தீர்மானம்—தொடர்ச்சி.

ஆ. விதி 32-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ தளர்த்தி இப் பேரவை இன்று அரசினர் அலுவல்களை எடுத்துக்கொள்ள வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றது.